# முல்லை கலிகாட்டும் மக்கள்

**முனைவர் த.அமர்நாத்**
*ஆராய்ச்சி அறிஞர்*

**முன்னுரை**

**“கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து**
**வாளோடு முன்தோன்றிய மூத்த குடி தமிழ்க்குடி”**

என்னும் பொன் மொழிக்கு ஏற்ப பழமை வாய்ந்த தொல் மரபை சார்ந்தவர்கள் தமிழர்கள் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே சிறந்த அறிவாற்றலோடும், சிந்தனையாற்றலோடும் வாழ்ந்து வந்துள்ளனர். ஐவகை நிலப்பாகுபாடு, இருவகை வாழ்க்கை முறை, பண்பாடு, நெறிப்பட்ட பழக்க வழங்கங்களோடு, உயர் நாகரீகம் போன்றவற்றை பகுத்தும், தொகுத்தும் செந்நெறி வாழ்க்கை வாழ்ந்துவந்துள்ளனர். இயற்கையின் அமைப்பால் அடையாளபடுத்தப்பட்ட காடும் காடு சார்ந்த நிலப்பகுதியினை முல்லை நிலம் என்றனர். இந்நிலமக்கள் ஆயர், ஆய்ச்சியர் எனப்பட்டனர் இவர்களுடைய வாழ்வியல் முறை பல நுட்பங்களையும், சிறப்புகளையும் கொண்டதாக விளங்குகின்றது. கலித்தொகை என்னும் நூலில் முல்லைக்கலியை களமாகக் கொண்டு இக்கட்டுரை ஆராயப்படுகிறது.

**கலித்தொகையில் முல்லைக்கலி**

பூர்வீகத் தமிழர்களின் தடயங்களையும், தழும்புகளையும் அறிய உதவும் ஆதாரக்கடலே சங்க நூற்களாகும். அவற்றுள் எட்டுத்தொகை நூற்களுள் ‘கற்றறிந்தார் ஏத்தும் கலி’ என்று சிறப்பித்துச் சான்றோர்களால் கூறப்படுவது கலித்தொகையாகும். இதில் முல்லைக்கலி 17 பாடல்களை கொண்டது. இதனை நல்லுருத்திரன் இயற்றியுள்ளார். முல்லைக்கலி முழுமையாக ஆயர் ஆய்ச்சியர்களின் வாழ்வியலை காட்சி போல் காட்டுகிறது.

**மக்கள் இயல்பு**

முல்லை நிலத்தின் மக்களாகிய ஆயர் ஆய்ச்சியர் ஆயர் இவர்கள் காடுசார்ந்த இடத்தை வாழ்விடமாகக் கொண்டிருந்தனர். ஆண்கள் வீரமுடையவர்களாகவும், பெண்கள் அவர்களின் பண்பாடு கெடாமலும் வாழ்ந்து வந்துள்ளனர். களவு வாழ்க்கைக்குப் பின்னே கற்பு வாழ்க்கை என்ற நிலை இருந்திருகின்றது. விழாக்கள் கூத்து போன்றவற்றில் ஆர்வம் உடையவர்களாக திகழ்ந்துள்ளனர்.

**பழக்க வழக்கங்கள்**

மனிதனின் அன்றாட செயல்முறை மற்றும் நடைமுறையே பழக்கவழக்க எனப்படுகிறது. ஆயர்களின் பல வகையான பழக்கவழக்கங்கள் இருந்துள்ளன. அவை ஆநிரைகளை காடுகளுக்கு ஓட்டி சென்று மேய்பதும் அவற்றிடமிருந்து கிடைக்கும் பஞ்ச கவ்வியத்தை விற்கும் தொழிலையும் ஆயர்கள் செய்தனர்.

**“அளைக்கு எளியாள்**
**வெண்ணெய்கும் அன்னள்”**

என்னும் பாடலில் வெண்ணெய் பற்றிய குறிப்பு காணப்படுவதைச் காணலாம். மோர் விற்ற செய்தியும் காணப்படுகிறது.

**உணவு**

ஆயர்களின் உணவுப் பொருளாகப் பசுவிடமிருந்து கிடைக்கும் பால், மோர், நெய் போன்றவைகள் இருந்தன. மாங்காய் ஊறுகாய் செய்து உணவுடன் தொடு உணவாக பயன்படுத்தியமையை “மாங்காய் நறுங்கடி கூட்டுவோம்” என்னும் பாடல்வரிகளால் உணரலாம். அக்கால மக்கள் காய்காத பாலிலிருந்து வெண்ணெய் தயாரிக்கும் வழக்கம் கொண்டிருந்தனர். இதனை ‘நெய்கடை பாலின்’ என்ற சொல்லாடல் மூலம் உணரலாம்.

**ஆடை**

தமிழர்கள் ஆடைகளை நாகரீகத்துடன் அணிந்திருந்ததை முல்லை கலி மூலம் அறியலாம். “பூ” வேலைப்பாடுகளுடன் கூடிய ஆடையையும், கருந்துவர் ஆடை என்ற பூ வேலைப்பாடுடன் கூடிய ஆடையினையும் உடுத்தினர். இதனை,

**“பூங்கரை நிலம் புடைதாழ மெய் அசைஇ**
**காயாம் பூங் கண்ணிக் கருந்துவர் ஆடையை”**

என்னும் பாடல் வரிகளால் அறியலாம்.

**ஒப்பனை**

பெண்கள் ஒப்பனை செய்துக்கொள்ளும் வழக்கம் இருந்தது. ஐவகையாக கூந்தலை முடித்தல், உடலில் தொய்யல் என்னும் படம் வரைதல், மேனியில் சந்தணம் மற்றும் மலர்களாலான குழம்பை பூசிக் கொள்ளுதல் போன்ற வழக்கம் இருந்தது. இதனை

**“நறுநுதல்! என்கொல்-ஐங்கூந்தல் உளர”**

என்ற பாடலாலும்,

**‘ஐய பதிர்ந்த சுணங்கு அணிமென் முலைமேல்**
**தொய்யில் எழுதுகோ மற்று? என்றான்”**

என்ற வரிகள் மூலம் அறியலாம்.

**பண்பாடு**

பண்படுதலே பண்பாடாகும். ஆயர்கள் பண்பட்ட வாழ்க்கை நெறிகளை கடைபிடித்தனர்.

அவர்களுக்கென்று தனித்த பண்பாடுகள் இருந்தமையை காணலாம். ஆயர் பெண்கள், கொல்லேறு நிகழ்ச்சியில் கலந்து வெற்றி பெற்ற ஆண்மகனையே தனது வாழ்க்கை துணையாக ஏற்றனர்.

இதனை,

**கொல் ஏறுசாட இருந்தார்க்கு ஏம்பல் இருங்**
**கூந்தல் அனை கொடுப்பேம் யாம்"**

என்ற பாடல் வரிகளால் அறியலாம். திருமண பந்தலில் புது மணல் பரப்பி, வீட்டிற்கு புதுப்பூவல் (சிவப்பு மண்) பூசி புதுப்பித்துசடங்குகள் நடைபெற்றது என்கிற செய்திகளையும் அறிய முடிகிறது. சூ;ரைத்தல் (சத்தியம் செய்தல்) பழக்கமும் மக்களிடையே இருந்தது.

**விழாக்கள்**

கொல்லேறு நிகழ்ச்சி நடைபெற்ற பின்பு மாலை நேரங்களில் பெண்கள் குரவக் கூத்து ஆடுவார்கள். இசையுடன் பண்ணமைந்த பாடல்களும் பாடப்பட்டன.

**"குரவை தழிஇ யாம் மரபுளி பாடி"**

கொல்லேறு நிகழ்ச்சி என்பது தற்காலத்து ஜல்லிகட்டு போட்டியாகும்.

**வழிபாடும் நம்பிக்கைகளும்**

ஒவ்வொரு இனக்குழுக்களுக்கும் தங்களுக்கென்று தனித்த தெய்வங்களும் அதைச்சார்ந்த நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் இருக்கும். ஆயர்களின் தெய்வம் திருமாலாகும். ஆயர் குல மக்கள் தங்கள் நிலத்தை ஆளும் தலைவனை திருமால் காக்கவேண்டும் என்று பாடிய பாடலொன்று,

**"................... மன்னி**
**அமைவரல் அருவி ஆர்க்கும்**
**இமையத்து உம்பரும் விளக்குக"**

என்னும் பாடலடிகள் மூலம் அறியலாம்.

உடல் மற்றும் மன உறுதிக்கும் குறியீடான வயிரம் பாய்ந்த மரங்களை வீர மறவர்கள் வழிபட்டு காளைகளை அடக்கச் சென்றதாகப் புலப்படும் செய்தி, தொல் குடியிலும் மரவழிபாடு இருந்தமையை உறுதி செய்கிறது.

**"துறையும் ஆலமும் தொல்வலி மராஅழும்**
**முறையுளி பரா அய்"**

ஆயர்களின் திருமணப்பந்தலின் நடுவே பெண் எருதுவின் கொம்பை நாட்டித் தெய்வமாகக் கருதி மாலையிட்டு வழிபட்டனர். இது இன்றைய புனிதப்பொருள் வழிபாட்டிற்கு முன்னோடியாக விளங்குகின்றது.

**"எருமைப் பெடையோடு, எமர் ஈங்கு அயரும்"**

என்னும் பாடலடி கொம்பு வழிபாட்டைக் குறிக்கின்றது.

**"குடர் கூளிக்கு ஆர்த்துவான் போன்ம்"**

என்னும் பாடலடியில் கூளி என்னும் சிறு தெய்வப் பெயர் குறிக்கப்பெறுவதால் போர்க்காலங்களில் கூளிக்குப் படையலிடுதல் நிகழ்வு நடந்தமை புலனாகின்றது. நிமிர்த்தம் பார்க்கும் வழக்கம் இருந்தமையை,

**ஏழை இரும்புகர் பொங்க அப்பூ வந்து என்**
**கூழையுள் வீழ்ந்தன்று மன்"**

என்னும் பாடலடி மூலம் புலனாகின்றது.

**முடிவுரை**

கலித்தொகையில் மொத்தம் 150 பாடல்கள் உள்ளன. அதில் முல்லைக் கலியிலுள்ள 17 பாடல்களும் முல்லை நில மக்களைச் சித்தரிக்கும் பாடல்வரிகளாக உள்ளன. அறிவியல், தொழில் நுட்ப வசதிகள் இல்லாத காலகட்டத்திலும் நம் தமிழ் மரபினர் தங்களுகென்று நெறிப்பட்ட வாழ்வியல் முறைகளைப் பின்பற்றியுள்ளார்கள். எனவேதான் தமிழர்களின் நாகரீகம் "உலக நாகரீகத்தின் முன்னோடி" என்று எல்லோராலும் போன்றப்படுகின்றது.